# யூன் – 05 – புதன்

## புனித பொனிப்பாஸ்

**வானங்களின்மேல், தொன்மைமிகு வானங்களின்மேல் ஏறிவரும் அவரைப் புகழுங்கள்: திபா. 68:33**

---

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 20 : 28 – 38

அந்நாட்களில் பவுல் எபேசு சபையின் மூப்பர்களிடம் கூறியது : தமது சொந்த இரத்தத்தால் தமதாக்கிக் கொண்ட கடவுளின் திருச்சபையை மேய்ப்பதற்கு தூய ஆவியார் உங்களைக் கண்காணிப்பாளராக ஏற்படுத்தியுள்ளதால் உங்களையும், மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக்கொள்ளுங்கள்.உங்களை விட்டு நான் சென்ற பின்பு கொடிய ஓநாய்கள் உங்களுக்குள் நுழையும் என்பது எனக்குத் தெரியம். அவை மந்தையைத் தப்பவிடாதவாறு தாக்கும்.உங்களிடமிருந்து சிலர் தோன்றி சீடர்களையும் தம்மிடம் திசைதிருப்புமளவுக்கு உண்மையைத் திரித்துக் கூறுவர்.எனவே விழிப்பாயிருங்கள் மூன்று ஆண்டு காலமாக அல்லும் பகலும் இடைவிடாது கண்ணீரோடு நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் அறிவுறுத்தி வந்ததை நீங்கள் நினைவிற் கொள்ளுங்கள்.இப்போதும் நான் உங்களைக் கடவுளிடம் ஒப்படைக்கிறேன் அவரது அருள் வார்த்தைக்கும் கட்டுப்படுவீர்களாக! அவ்வார்த்தை வளர்ச்சியையும் தூயோர் அனைவருக்குமுரிய உரிமைப்பேற்றையும் உங்களுக்குத் தரவல்லது.எவருடைய பொன்னுக்கோ வெள்ளிக்கோ ஆடைக்கோ நான் ஆசைப்பட்டதில்லை.என்னுடைய தேவைகளுக்காகவும் என்னோடிருந்தவர்களுடைய தேவைகளுக்காகவும் இந்த என் கைகளே உழைத்தன என்பதை நீங்கள் அறிவீர்கள்.இவ்வாறு பாடுபட்டு உழைத்து நலிவுற்றோர்க்குத் துணை நிற்க வேண்டுமென்று அனைத்திலும் உங்களுக்கு வழிகாட்டினேன். அதோடு, பெற்றுக் கொள்வதைவிட கொடுத்தலே பேறுடைமை என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவு கூருங்கள் என்றும் கூறினேன்."இவற்றைச் சொன்னபின் அவர் முழந்தாள் படியிட்டு அவர்களெல்லாரோடும் சேர்ந்து இறைவனிடம் வேண்டினார்.பின் எல்லாரும் பவுலைக் கட்டித் தழுமவி முத்தமிட்டுக் கதறி அழுதனர். "இனிமேல் நீங்கள் என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை" என்று அவர் கூறியது அவர்களுக்கு மிகுந்த வேதனை அளித்தது. பிறகு அவர்கள் கப்பல்வரைக்கும் சென்று அவரை வழியனுப்பி வைத்தனர்.

**பதில்பாடல்:** உலகிலுள்ள அரசர்களே! கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்

## நற்செய்தி : யோவான்17 : 11 - 19

அக்காலத்தில்இயேசு வானத்தை அண்ணார்ந்து பார்த்து வேண்டியது : "தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்.நான் அவர்களோடு இருந்தபோது நீர் எனக்கு அளித்த உம்பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்து வந்தேன் நன்கு பாதுகாத்தேன். அவர்களுள் எவரும் அழிவுறவில்லை. மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறும் வண்ணம் அழிவுக்குரியவன் மட்டுமே அழிவுற்றான்."இப்போது உம்மிடம் வருகிறேன். என் மகிழ்ச்சி அவர்களுள் நிறைவாக இருக்கும்படி நான் உலகில் இருக்கும்போதே இதைச் சொல்கிறேன். உம் வார்த்தையை நான் அவர்களுக்கு அறிவித்தேன். நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல், அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆதலால் உலகம் அவர்களை வெறுக்கிறது. அவர்களை உலகிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று நான் வேண்டவில்லை தீயோனிடமிருந்து அவர்களைக் காத்தருள வேண்டுமென்றே வேண்டுகிறேன்.நான் உலகைச் சார்ந்தவனாய் இல்லாதது போல் அவர்களும் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல.உண்மையினால் அவர்களை உமக்கு அர்ப்பணமாக்கியருளும். உமது வார்த்தையே உண்மை.நீர் என்னை உலகிற்கு அனுப்பியது போல, நானும் அவர்களை உலகிற்கு அனுப்புகிறேன்.அவர்கள் உண்மையினால் உமக்கு உரியவர் ஆகும்படி அவர்களுக்காக என்னையே உமக்கு அர்ப்பணமாக்குகிறேன்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு தனது சீடர்களுக்கு இரண்டு செய்திகளைத் தருகிறார். இந்த இரண்டு செய்திகளும், இயேசுவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் பொருத்தமானதாக இருக்கிறது. 1. மகிழ்ச்சி 2. எச்சரிக்கை. இயேசு சொன்னதின்படி நாம் நமது வாழ்வை அமைத்துக்கொண்டால், அது நமக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியைத் தருவதாக அமையும். அப்படிப்பட்ட வாழ்வு சவாலான, கடினமாக வாழ்வுதான் என்றாலும், இயேசு மீது நம்பிக்கை வைத்து நாம் வாழ்கிறபோது, அது நமக்கு நிறைவான மகிழ்ச்சியைத்தரும். இயேசுவின் வார்த்தைகளை நமது வாழ்க்கையில் வாழ்ந்து காட்ட முற்படுகிறபோது, எச்சரிக்கை உணர்வும் நமக்கு இருக்க வேண்டும். இயேசுவின் நமக்குக் காட்டிய வழியில் வாழ நாம் முற்படுகிறபோது, இந்த உலகத்தில் நாம் மற்றவர்களால் வித்தியாசமாகப் பார்க்கப்படுகிறோம். இந்த உலகத்தில் நாம் வாழ்ந்தாலும், இந்த உலக மதிப்பீடுகளுக்கு எதிராக நாம் நமது வாழ்வை அமைத்துக்கொள்வதால், இந்த உலகம் நம்மை வெறுக்கும் என்ற எச்சரிக்கை உணர்வை இயேசு நமக்குத் தருகிறார். அத்தகைய போராட்ட வாழ்விலும் கடவுளின் அருள் நம்மோடு இருப்பதால், அது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். வாழ்வில் நிறைவைத்தரும். அதுதான் உண்மையான சாட்சிய வாழ்வு. எனது வாழ்வை நான் எப்படி அமைத்துக்கொள்கிறேன்? இந்த உலக மதிப்பீடுகளுக்கு ஏற்ப நான் வளைந்து, நெகிழ்ந்து எனது வாழ்வை அமைத்துக்கொள்கிறேனா? அல்லது போராட்ட வாழ்விற்கு என்னையே தகுதியுள்ளவனாக மாற்றிக்கொள்கிறேனா? இயேசுவின் மதிப்பீடுகளின்படி வாழும் கிறிஸ்தவர்களாக வாழும் வரம் வேண்டுவோம்.